**அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1996 இன் 13 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் கட்டளைச் சட்டத்தின் (283 ஆம் அதிகாரம்) 18 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (I) | 2020 திசெம்பர் 31 இல் சங்கத்திற்குப் பெறப்பட்ட வகைப்படுத்தப்படாத பணப் பரிமாற்றங்களின் கூட்டுத் தொகை ரூபா 7,956,077 என்பதுடன் அது முறையாக இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இம் மிகுதி ரூபா 4,885,020 | 2020 திசெம்பர் 31 இல் இனங்காணப்படாத பெறுவனவுகளின் மிகுதி (வகைப்படுத்தப்படாத பணப் பரிமாற்றங்களின் கூட்டுத்தொகை) ரூபா 7,956,077 ஆகும். வங்கிக் கணக்கினூடாக நேரடியாக எமக்குக் கிடைக்கின்ற உரிமையாளர் அல்லது திணைக்களமொன்று இனங்காணப்படாத பெறுவனவுகள் இக் | சங்கத்திற்கு கிடைக்கின்ற பணப் பரிமாற்றங்கள் முறையாக இனங்காணக் கூடிய வகையில் முறைமை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆல் அதாவது நூற்றுக்கு 159 வீதத்தினால் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், நேரடியாக வங்கிக்கு அனுப்பப்படுகின்ற பணப் பரிமாற்றங்களை இனங்காண்பதற்கு தேவையான தகவல்கள் வங்கி மூலம் அல்லது பணப் பரிமாற்றங்கள் செய்யப்படும் நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு சங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. | கணக்கில் உள்ளீர்க்கப்படுகின்றது. நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமையினால் எமது சங்கம் நீண்ட காலம் மூடப்பட்டிருந்தமையால் நேரடி பணப் பரிமாற்றங்கள் அதிகரித்தமையால் 2020 ஆம் வருடத்தில் அந் நிலைமை கணிசமான அளவினால் அதிகரித்திருந்தது. எனினும், அதில் ரூபா 1,367,045.48 ஆன தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் மிகுதித் தொகை முடிந்தளவு விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (II) | 2020 திசெம்பர் 31 இல் உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பங்களிப்புப் பணக் கணக்கில் காணப்பட்ட ரூபா 19,279,643 செலவு மிகுதி முறையாக இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்காமல் கடன்கொடுத்தோரின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2020.12.31 இல் உறுப்பினர்கள் விலகுவதற்கு விண்ணப்பித்திருந்ததுடன், உறுப்புரிமை இழந்த அடிப்படையில் உறுப்பினர் கணக்குகள் செயற்படுத்தப்படல் மற்றும் மரணம் காரணமாக உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பங்களிப்புப் பணம் மற்றும் வட்டிக் கணக்கின் கூட்டுத்தொகை அப் பெறுமதியில் காணப்படுகின்றது. உறுப்பினரின் பெயர் பணம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படாமை மற்றும் பதிவேடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக இம் மிகுதி சேமிக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் இப் பணத்தைப் பெறுவதற்கு சமர்ப்பித்ததன் பின்னர் குறிப்பிட்ட முறைமை பின்பற்றப்பட்டு இக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (III) | 2020 திசெம்பர் 31 இல் சங்கத்தின் 468 உறுப்பினர்களினால் மொத்தம் ரூபா 29,008,947 ஆன தவனைக் கொடுப்பனவுகள் தவறவிடப்பட்டிருந்தன. இக் கடன் மிகுதிகளில் இன்னும் அறவீடுகள் நிச்சயமற்ற கடன் மீதிகள் தொடர்பான பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் இழப்பீட்டுப் பெறுமதி இனங் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சங்கத்திற்கு அறவிட வேண்டிய உறுப்பினர் பங்களிப்புப் பணம், மரண மானிய நிதியம், மருத்துவ உதவி நிதியம், ஓய்வூதிய நிதியம், கடன் தவணை மற்றும் அதற்கான வட்டித் தொகை அறவிடப்படாது அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் சேவையாற்றும் நிறுவனம், தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்தி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் முன்னைய வருடத்தில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக காலத்திற்கு காலம் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக இப் பணிகளுக்கு சில தடைகள் ஏற்பட்டிருந்தன. | நிலுவைக் கடன் தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (I) | உறுப்பினர் மரணித்தல் அல்லது வேறு காரணங்களினால் அறவீடுகள் நிலுவையாக இருந்ததுடன் 2016 ஆம் வருடத்திற்கு முன்னைய காலப்பகுதிக்கான மொத்தம் ரூபா 920,205 ஆன நிலுவை கடன் மீதியொன்று, கடன்பட்டோராக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அனைத்து கடன் மிகுதிகளும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட கடன் மிகுதியாக கணக்காய்வின் போது அவதானிக்ககப்பட்டது. | மரணித்தல் அல்லது ஏனைய காரணங்களால் நிலுவையாக இருந்ததுடன் கடன் மிகுதி அத் தனிப்பட்டவர்கள் அல்லது சார்ந்தவர்களிடமிருந்து மேலும் அவிடுவதற்கு மேலதிக முயற்சிகள் எடுக்கப்பட்டமையால் இப் பணம் பதிவளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. | நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (II) | மீளாய்வாண்டில் நடைமுறைப் பொறுப்புக்களாக செலுத்த வேண்டிய மரண மானியக் கணக்கில் ரூபா 5,735,000 ஆன மிகுதியொன்று | | |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்தது. இம் மிகுதிக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலுத்த வேண்டிய மரண மானிய உறுப்புரிமைப் பட்டியல் பரிசோதிக்கப்பட்ட போது கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) அப் பதிவேட்டின் பிரகாரம் மரணித்து 05 வருடங்களுக்கும் மேற்பட்ட 30 உறுப்பினர்களுக்கான செலுத்த வேண்டிய மரண மானிய மிகுதி ரூபா 1,420,000 ஆகும். | கோவைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் குறிப்பிட்ட வாரிசுகள் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்காமையால் இவ்வாறு செலுத்த வேண்டிய பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு காணப்படுவதுடன் உரிமையாளர் சமர்ப்பித்தவுடன் உடனடியாக இம் மானியம் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தகவல்கள் கண்டறியப்பட்டு விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரச சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் திருத்திய யாப்பின் (1)(10) ஆம் பிரிவு | உறுப்பினர் ஒருவரின் மரணம் தெரிவிக்கப்பட்டு 02 மாதங்களுக்குள் அவரது சார்ந்தவர்களுக்கு அந்த உரிமை செலுத்தப்பட வேண்டியுள்ள போதிலும், அவ்வாறு சார்ந்தவர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 5,735,000 ஆனது 2020 திசெம்பர் 31 வரையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர் ஒருவரின் மரணம் தெரிவிக்கப்பட்டு 02 மாதங்களுக்குள் அவருக்கு உரிமை மானியம் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அவ்வாறு கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த மானியம் அறிக்கையிடப்பட்டமை குறிப்பிட்ட கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களினால் தேவையான ஆவணங்கள், அதாவது மரணச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ், | சங்கத்தின் யாப்பின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். |

பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் எதுவும் சமர்பிக்கப்பட்டிராமை மற்றும் பணத்தை பெறுவதற்கான உரிய பற்றுச்சீட்டுக்கள் முறையாக சமர்ப்பிக்கப்படாத காரணங்களாகும். இது தொடர்பாக உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தி குறித்த கொடுப்பனவுகள் விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பழைய உறுப்பினர்களின் விதவைகள் மற்றும் பிள்ளைகள் பலர் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் என இனங்காணப்பட்டிருந்ததுடன், அவர்களிடமிருந்து மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. பணத்தைச் செலுத்துவதற்காகப் பூரணப்படுத்தி அனுப்ப வேண்டிய பற்றுச்சீட்டு மீண்டும் எமக்கு பல சந்தர்ப்பங்களில் கிடைப்பதில்லை. அவ்வாறான காரணங்களினால் மரண மானியங்கள் வழங்குவதில் தாமதமேற்பட்டது. இத் தாமதத்தைக் குறைப்பதற்காக தற்போது வாரிசுகள் இல்லாத உறுப்பினர்களுக்கு வாரிசு நியமனப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இத் தாமதங்களை பெருமளவில் தடுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| (II) | 1891 ஆம் வருட 05 ஆம் இலக்க அரச சேவை பரஸ்பர சகாய சங்கத்தின் யாப்பின் 16(1),(2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | சங்கத்தின் 133,134 மற்றும் 135 பொதுச் சபைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | 133, 134 மற்றும் 135 பொதுச் சபைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் வரைவுபடுத்தப்பட்டு முடிநதுள்ளதுடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | யாப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (III) | நிதிப்பிரமாணக் கோவையின் 756 ஆம் பிரமாணம் | 2020 திசெம்பர் 31 இல் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2021 யூலை 28 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனா நிலைமை காரணமாக இற்றை வரையில் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. என்பதுடன் முடிந்தளவு விரைவில் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (IV) | 2013 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | நிறுவனத்தினால் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (V) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிறுவகத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட சட்டங்கள் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 53,976,946 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 67,102,229 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,125,283 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு ஏனைய வருமானம் முன்னைய வருடத்தை விட நூற்றுக்கு 77 வீதத்தினால் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (I) | 2020 ஆம் வருடத்தில் காசுக் கணக்காய்வு மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமை தொடர்பாக 12 உப குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 06 குழுக்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன. | நாட்டில் நிலவிய பாதகமான சூழ்நிலை காரணமாக சந்தர்ப்பங்களில் விதிக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றி இக் கூட்டங்கள் நடாத்தப்படுதலானதும ட்டுப்படுத்தப்பட்டது. | குறிப்பிட்ட சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (I) | சங்கத்தினால் 2019 திசெம்பர் 31 வரை 07 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,020,357 ஆன ஆதனக் கடன் கொடுப்பனவுகள் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளைத் திருப்பிச் செலுத்தாத ஆதனக் கடன் தொகையை பெற்ற உறுப்பினர்களிடமிருந்து நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாத உறுப்பினர்களின் பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கடன் தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (II) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் வெளிநாட்டு யாத்திரைக் கடன் அறவிடப்படாத உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 என்பதுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் அளவு ரூபா 1,194,853 ஆக இருந்தது. | பணம் அறவிடப்படாத அனைத்து உறுப்பினர்களினதும் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதுடன் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று | விரைவில் நடவடிக்கை எடுத்து நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நோய் நிலைமை காரணமாக காலத்திற்குக் காலம் மூடப்பட்டிருந்தமையால் முன்னைய வருடத்தில் அந் நடவடிக்கைகளுக்கு சில தடைகள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (III) | 2015 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரையிலான காலப்பகுதியில் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்னேற்றம் முறையே 168,1333,336,568 மற்றும் 98 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய வருடம் மற்றும் மீளாய்வாண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் வருடத்தில் உறுப்பினர் ஆட்சேர்ப்பு நூற்றுக்கு 82 வீதத்தினால் குறைவடைந்திருந்தது. | ஆட்சேர்ப்பு பிரச்சார நடவடிக்கைகளுக்காக முன்னைய வருடத்தில் நிறுவனங்களுக்குச் செல்வதற்குப் பொருத்தமான சூழ்நிலையொன்று நாட்டில் காணப்படாமையினால் உறுப்பினர்களின் ஆட்சேர்ப்புக்களில் பாரியளவு குறைவடைவொன்று ஏற்பட்டதுடன் வேறு உபாயங்களை உருவாக்குவதன் மூலம் உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு ஊக்குவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தற்போது சங்கத்தின் பேரில் Youtube அலைவரிசையொன்றை ஆரம்பித்து இரண்டு நிகழ்ச்சிகளை வெளியிட்டுள்ளதுடன் facebook கணக்கில் கவர்ச்சிகரமான விளம்பரங்களை பதிவிட்டுள்ளோம். ‘‘திரிய’’ எனும் பேரில் 8% ஆன குறைந்த வட்டி விகிதத்தில் ரூபா 500,000 அதிகபட்ச கவர்ச்சிகரமான கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | புதிய உறுப்பினர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சங்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 பேர் என்பதுடன் உண்மையான பதவியணி 30 பேர்ஹ் ஆகும். 2017 பெப்ரவரி 13 இலிருந்து வெற்றிடங்கள் காணப்படுகின்ற சங்கத்தின் ஒன்றினைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் பொருத்தமான அதிகாரிகள் ஆட்சேர்க்கப்படவில்லை. | சங்கத்தில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற ஒன்றிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கு பத்திரிகை விளம்பரங்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அதற்காகத் தகுதியான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளமையால் விரைவில் அப் பதவிகளுக்கான ஆட் சேர்ப்புக்களுக்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |